25th September 1958]

Supply of Electricity

* 525 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா சங்கரன்கோவில் தாலூகா வெள்ளாங்குளம் கிராம மக்கள் மின்சார சப்ளை வேண்டுமென்று மனு கொடுத்தார்களா ?

(ஆ) அந்த மனுவின் மீது நடவடிக்கை என்ன நிலைமையி லிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) It is reported that the Superintending Engineer, Papanasam Electricity System, is investigating the feasibility of formulating a scheme for extending electricity to the village and that on receipt of his report, suitable action will be taken in the matter by the Electricity Board.

SRI A. V. P. ASAITHAMBI : பணமில்லை என்ற காரணத்திற்காக மின்சார சப்ளை கொடுக்கிற வேலை தாமதப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழ் நாட்டில் உள்ள கிராமங்கள் பூராவிற்கும் மின்சார சப்ளை கொடுக்க என்ன செலவாகும் என்ற திட்டம் ஏதாவது அரசாங்கத்தினிடம் இருக்கிறதா ? இருக்கிறது என்று சொன்னால் எவ்வளவு காலத்திற்குள் போட்டு முடிக்கலாம் என்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : பணமில்லாத காரணத்தினால் மட்டும் மின்சார விஸ்தரிப்பு தடைபட்டுப் போகவில்லை. மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்த வரையில், நம் மாகாணம் மற்ற எல்லா மாகாணங்களையும் விட அதிக வேகத்தில் போய் கொண்டிருக்கிறது. மின்சார விஸ்தரிப்பினால் ஆயிரக்கணக்கான கிராமங்கள் நன்மை அடைந்திருக்கின்றன. அது, தொடர்ச்சியாக செய்து கொண்டு போகப்படும். இன்று அது போகக் கூடிய வேகத்தைப் பார்த்தால் இன்னும் சில வருடங்களுள் நம் மாகாணத்திலுள்ள எல்லா சிறிய கிராமங்களுக்கும் கூட மின்சாரம் கொடுத்து உதவ முடியும் என்ற நம்பிக்கையுடன்தான் இந்த இலாகா இன்று வேலை செய்கிறது.

Kailasagiri Panchayat

* 526 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether it is a fact that three streets belonging to Nariyambattu village, Gudiyattam taluk, have been separated and added to the neighbouring Kailasagiri Panchayat without the consent of the people and against the general electoral list in vogue for the last thirty years?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The streets in question belong to the Kailasagiri revenue village. They were erroneously included by the Revenue authorities in the electoral rolls of the Nariyambattu village during 1953. The streets have now been included in the Kailasagiri Panchayat and the electoral rolls correctly prepared at the time of the revision during 1957.

SRI A. A. RASHEED : Is the hon. Minister aware of the fact that the villagers of Nariyambattu abstained from taking part in the elections to that panchayat as a protest against the action of the Inspector? Will the Government look into the matter and restore the streets to Nariyambattu village itself?